

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜூலை 13, 2017 | புரட்சி 16 | முழக்கம் 26 | விலை: ரூ.3.00

# இழந்துவரும் உரிமைகளை மீட்போம் ! தமிழகத்தின் தனித்தன்மை காப்போம் !

# சமூகநீதி-சமத்துவ பரப்புரைப் பயணம்

## கழக தலைமைக் குழுவின் முடிவுகள்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் 2017 ஜூலை 10ஆம் தேதி காலை சென்னை கழகத் தலைமை நிலையத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் கூடியது. காலை 10.30 மணிக்கு தொடங்கிய கூட்டம், மாலை 7 மணி வரை நீடித்தது. தமிழ்நாட்டில் குறுக்கு வழியில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி காலூன்ற துடிக்கும் பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். மதவாத சக்திகளின் ஆபத்துகளை முறியடிப்பது குறித்தும் தமிழ்நாட்டு மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கும் பரப்புரை இயக்கங்களை முன்னெடுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. குறிப்பாக இந்தியாவிலேயே தமிழ்நாடு மதக்கலவரங்கள் இல்லாத சமூகநீதி கோட்பாடுகளைப் பின்பற்றி ஏனைய மாநிலங் களுக்கு வழிகாட்டியாக திகழ்ந்து வருவதை சீர்குலைக்கும் சதிகள் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருவதை கவலையுடன் தலைமைக்குழு பரிசீலித்தது. குறிப்பாக கல்வித் துறையில் மோடியின் குறுக்கீடு, தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்கல்விக்கு உருவாக்கி வரும் தடைகள், நீட் தேர்வால் தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவு; இந்தி, சமஸ்கிருதத் திணிப்பு; மாடுகளை சந்தைகளில் விற்பதற்குக் கொண்டு வரப்பட்ட கெடுபிடிகளால், மாட்டு வர்த்தகர்கள், தோல் ஏற்றுமதி, தோல் தொடர்பான தொழில் களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி, ஜாதி அமைப்புகளை ஊக்குவித்து அதன் வழியாக பா.ஜ.க. ஆதரவு சக்திகளை வளர்க்கும் சூழ்ச்சித் திட்டங்கள்; இந்தியாவை ஒற்றைப் பண்பாடு; ஒற்றை ஆட்சியாக மாற்றி, ஒவ்வொரு தேசிய இனங்களின் அடையாளம், மாநிலங்களின் தனித்துவத்தை அழிக்கும் முயற்சிகள் குறித்து விரிவாக விவாதித்தது.

‘பெரியார் எதிர்ப்பு’ திராவிடர் கருத்தாக்க எதிர்ப்பு என்ற கருத்துகளுக்கு முன்னுரிமை தந்து செயல்படும் அமைப்புகள், பா.ஜ.க.வின் ஒற்றைப் பண்பாட்டுத் திணிப்பை எதிர்ப்பதில் முனைப்புக் காட்டாமல், பெரியார் எதிர்ப்பை முன்னிறுத்துவது மதவாத சக்திகளுக்கு மறைமுகமான ஆதரவுத் தளத்தை உருவாக்குவதற்கே பயன்படுவதையும் தலைமைக் குழு கவலையுடன் பரிசீலித்தது.

ஜாதி ஆணவப் படுகொலை எதிர்ப்பு - ஜாதி ஒழிப்பு இயக்கங்களை தொடர்ச்சியாக பெரியார் - அம்பேத்கர் வழியில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்தும் விரிவாக தலைமைக் குழு விவாதித்தது. பெரியார் - அம்பேத்கர் என்ற இரு பெரும் தலைவர்களும் வெவ்வேறு கருத்துடையவர்கள் என்று கூறிக் கொண்டு, இந்தத் தலைவர்களின் கருத்தியல்களுக்கிடையே முரண்பாடுகளைத் திணிக்கும் சில ‘ஆய்வாளர்கள்’ எழுதும் கட்டுரைகள் சமூகத்தில் பிற்போக்கு - ஜாதிய - மதவாத சக்திகளுக்கே பயன்படுவதை கவனத்தில் கொண்டு பெரியார், அம்பேத்கர் வலியுறுத்திய ஜாதி ஒழிப்பு - சமூக ஒடுக்குமுறை பார்ப்பன மதவாத எதிர்ப்பு கருத்துகளை அந்த இருபெரும் தலைவர்களை இணைத்து மக்களிடையே கொண்டு செல்வதில் தீவிரமாக செயல்படவேண்டும் என்றும் தலைமைக் குழு முடிவு செய்தது.

கழகத்தில் ஏராளமான இளைஞர்கள் இணைந்து செயல்படுவதற்கு முன்வரும் நிலையில் இந்த இளைஞர் சக்தியை ஒரு முனைப்படுத்தி இயக்கப் பணிகளை தீவிரமாக முன்னெப்பதற்கு கழகக் கட்டமைப்புகளை மேலும் வலிமைப்படுத்துவது குறித்தும் இயக்கப் பணிகளில் தீவிரம் காட்டி செயல் படாத கழக அமைப்புகளில் பொறுப்பாளர்கள் மாற்றம் பற்றியும் தன் முனைப்பின்றி சமுதாய நலனை முன்னிறுத்தி இயக்கச் செயல்பாடுகளை தீவிரப்படுத்துவதற்கான பயிற்சிகள் மற்றும் பிரச்சினைகளை அணுகும் கண்ணோட்டம்; தோழமை அமைப்புகளிடம் உறவுகளை மேம் படுத்துதல்; கழகம் அறிவிக்கும் செயல்திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய இயக்கப் பொறுப்புகள் குறித்து செயல்பாட்டாளர்களுக்கு பயிற்சிகளை நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

கழக செயல்பாடுகளை விளக்கி தலைமைக் கழகத்துக்கு அறிக்கை அனுப்புதல்; கழக ஏடுகளுக்கு சந்தா சேர்த்தல் குறித்தும் தோழர்கள் கவனம் செலுத்தி செயல்பட வேண்டும் என்ற கருத்துகளும் முன் வைக்கப்பட்டன.

திராவிடர் விடுதலைக் கழகம் 2012 ஆகஸ்டு 12ஆம் நாள் தொடங்கப்பட்டது. அதையொட்டி கடந்த ஆண்டு ‘நம்புங்க அறிவியலை; நம்பாதீங்க சாமியார்களை’ என்ற தலைப்பில் தமிழகம் முழுதும் பரப்புரை இயக்கங்களை நடத்தி, ஆகஸ்ட் 12ஆம் தேதி ஆத்தூரில் பயண நிறைவு விழா மாநாடு போல் நடத்தப்பட்டது.

அதேபோல இவ்வாண்டு ஜூலை 8ஆம் தேதி

(4ஆம் பக்கம்)

## பரப்புரைக் குழுக்கள் — பயணத் திட்டம்

**கோவை :**

8.8.2017 - கோவை, சூலூர், பல்லடம், திருப்பூர் (தங்கல்)
9.8.2017 - குன்னத்தூர், கெட்டிசெவியூர், கொளப்பலூர், கோபி (தங்கல்)
10.8.2017 - அத்தாணி, அந்தியூர், ஆப்பக்கூடல், பவானி (தங்கல்)
11.8.2017 - கவுந்தபாடி, காஞ்சிக்கோயில், திங்களூர், பெருந்துறை (தங்கல்)
12.8.2017 - வெள்ளோடு, மொடக்குறிச்சி, கொக்கராயன்பேட்டை, திருச்செங்கோடு (நிறைவு)

**ஒருங்கிணைப்பாளர்கள் : பன்னீர்செல்வம் (சூலூர்), நிர்மல்குமார் (கோவை)**

**மேட்டூர் :**

8.8.2017 - மேட்டூர் தொடக்கம் : மேச்சேரி, தர்மபுரி, காவேரிப்பட்டிணம் (தங்கல்)
9.8.2017 - கிருட்டிணகிரி : பர்கூர், ஊத்தங்கரை(தங்கல்)
10.8.2017 - அரூர், வாழப்பாடி, சேலம் (தங்கல்)
11.8.2017 - ஓமலூர், தாரமங்கலம், சின்னப்பம்பட்டி, இளம்பிள்ளை (தங்கல்)
12.8.2017 - ஆட்டையாம்பட்டி, மல்லசமுத்திரம், திருச்செங்கோடு (நிறைவு)

**ஒருங்கிணைப்பாளர்கள் : சி.கோவிந்தராசு (மேட்டூர்), கிருட்டிணன் (நங்கவள்ளி)**

**மயிலாடுதுறை :**

8.8.2017 - மயிலாடுதுறை, குத்தாலம், ஆடுதுறை, திருவிடைமருதூர், கும்பகோணம் (தங்கல்)
9.8.2017 - நாச்சியார்கோயில், வலங்கைமான், நீடாமங்கலம், மன்னார்குடி(தங்கல்)
10.8.2017 - மதுக்கூர், பட்டுக்கோட்டை, பாப்பாநாடு, தஞ்சாவூர் (தங்கல்)
11.8.2017 - வல்லம், செங்கிப்பட்டி, திருவெறும்பூர், காட்டூர், திருச்சி (தங்கல்)
12.8.2017 - முசிறி, தொட்டியம், நாமக்கல், திருச்செங்கோடு (நிறைவு)

**ஒருங்கிணைப்பாளர்கள் : இளையராசா (மயிலாடுதுறை), மகேஷ் (மயிலாடுதுறை)**

**சென்னை :**

6.8.2017 - பல்லாவரம், பொழிச்சலூர், அனகாபுத்தூர், குன்றத்தூர் (தங்கல்)
7.8.2017 - தாம்பரம், கூடுவாஞ்சேரி, சிங்கபெருமாள்கோயில், செங்கற்பட்டு (தங்கல்)
8.8.2017 - மதுராந்தகம், சித்தாமூர், மரக்காணம், திண்டிவனம் (தங்கல்)
9.8.2017 - கூட்டேரிப்பட்டு, விக்கிரவாண்டி, விழுப்புரம், அரசூர் (தங்கல்)
10.8.2017 - திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர், பகண்டைகூட்ரோடு, சங்கராபுரம் (தங்கல்)
11.8.2017 - மூரார்பாளையம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், ஆத்தூர் (தங்கல்)
12.8.2017 - மங்களபுரம், இராசிபுரம், திருச்செங்கோடு (நிறைவு)

**ஒருங்கிணைப்பாளர்கள் : இரா. உமாபதி (சென்னை), ந. அய்யனார் (விழுப்புரம்)**

**மதுரை :**

8.8.2017 - மதுரை
9.8.2017 - சிவகங்கை, காளையார்கோயில், காரைக்குடி (தங்கல்)
10.8.2017 - நத்தம், மணப்பாறை, குளித்தலை (தங்கல்)
11.8.2017 - மாயனூர், புலியூர், கரூர் (தங்கல்)
12.8.2017 - வேலாயுதம்பாளையம், வேலூர், பரமத்தி, திருச்செங்கோடு (நிறைவு)

**ஒருங்கிணைப்பாளர்கள் : வேணுகோபால் (பவானி), சிவக்குமார் (ஈரோடு)**

**– தலைமைக் கழகம்**

**தலையங்கம்**

## தமிழகத்தின் தனித்துவத்தைக் காப்போம்

மதுரையில் உள்ள சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் பார்ப்பனிய கூத்து அரங்கேறியிருக்கிறது. கேசவ சேவா கேந்திரம் மற்றும் சிறீகிருஷ்ணா அறக்கட்டளை சார்பாக 'பாத பூஜை' – 'பாரத மாதா பூஜை' நடத்த பள்ளி நிர்வாகம் அனுமதித்துள்ளது. மாணவர் – ஆசிரியர்கள் கால்களைக் கழுவும் 'பாத பூஜை'யும் ஆர்.எஸ்.எஸ். கொடியை கரங்களில் ஏந்தியபடி நிற்கும் 'பாரத மாதா' சிலை வணக்கமும் கட்டாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

கோவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக 'விசுவ இந்து பரிஷத்' முன்னணி பிரமுகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பழனி அருகே மாடுகளை விற்பனைக்குக் கொண்டு சென்ற ஒரு வாகனத்தைத் தடுத்து நிறுத்திய மன்னார்குடியைச் சார்ந்த ஒரு பார்ப்பன 'ஜீயர்' காவல் நிலையத்தில் ஒப்படைத்திருக்கிறார். மதவெறி சக்திகள் திரண்டு வன்முறையில் இறங்கவே பொது மக்கள் திரண்டு வன்முறைக் கும்பலை திருப்பித் தாக்கி விரட்டியடித்ததாக செய்திகள் வந்துள்ளன. பார்ப்பன ஜீயர் பாதுகாப்போடு ஊர் திரும்பி விட்டார்.

ஈஸ்டர் பண்டிகையின்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிறிஸ்தவர்கள் மீது தாக்குதல் நடத்திய மதவெறி கும்பல், கம்பம் நகரில் ரம்ஜான் பண்டிகையின் போது மசூதி மீதும் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். கோவை அருகே ஈழ அகதிகள் முகாமில் பெட்ரோல் குண்டுகளை வீசியுள்ளனர்.

மதச்சார்பின்மை மற்றும் பெரியாரிய பரப்புரைகளுக்கு காவல்துறை கெடுபிடி காட்டி அனுமதி மறுக்கும் அதே நேரத்தில் 'சங்பரிவார்' வன்முறையாளர்கள் சட்டங்களை கரங்களில் எடுத்துக் கொண்டு வெறியாட்டம் போடுவதை காவல்துறை கண்டு கொள்வதே இல்லை.

'ஓ.என்.ஜி.சி.' நிறுவனம், கதிராமங்கலம் கிராமத்தின் நீர்வளத்தை பாழாக்குவதை எதிர்த்து தொடர்ந்து போராடும் பொது மக்களை ஒடுக்கி, காவல்துறை கைது செய்து சிறையிலடைத்து வருகிறது. உரிமைக்காக களத்தில் நிற்கும் செயல்பாட்டாளர்கள் மீது 'குண்டர் சட்டம்' ஏவப்படுகிறது. தமிழக காவல்துறையின் அதிகாரத்தை பா.ஜ.க. பறித்துக் கொண்டுவிட்டது போலவே ஒவ்வொரு நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தியாவை காவிமயமாக்கி, உணவு – மொழி – பண்பாடு – கல்வி – வரிவிதிப்பு – என்று அனைத்துத் துறைகளையும் தனது அதிகாரத்தின் கீழ் படிப்படியாகக் கொண்டு வருகிறது நடுவண் பா.ஜ.க ஆட்சி. மாநிலங்களின் தனித்துவங்கள் அழிக்கப்படுகின்றன.

இந்தியாவிலேயே 'காவிப் படை' கால் பதிக்க முடியாத ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கிறது. இதன் 'தனித்துவத்தை' படிப்படியாக அழிக்கும் முயற்சிகள் வேகமெடுத்து வருகின்றன.

சாலையில் திரியும் மாடுகளின் 'பின்புறத்தை' தொட்டு வணங்கி, மாட்டின் சிறுநீரை விலைக்கு வாங்கி குடிக்கும் மக்கள் நிறைந்த இந்தி பேசும் 'பசு மாட்டு' மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டையும் இணைத்து விட்டால் பிறகு தமிழகத்தின் நிலை என்னவாகும் என்ற கேள்வியை கவலையுடன் தமிழர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

மருத்துவமனையில் இறந்தவர்களின் சடலத்தைக்கூட தோள்களில் சுமந்துகொண்டு பல மைல் தூரம் நடந்தே செல்வதும், கை ரிக்ஷாவில் வைத்து கிராமத்துக்குக் கொண்டு செல்வதுமான கோரமான நிகழ்வுகள் – இந்தி பேசும் மாநிலங்களிலிருந்து தான் ஒவ்வொரு நாளும் வந்து கொண்டிருக்கின்றன.

தலித் மக்கள் தன்னை சந்திப்பதற்கு முன்பு சோப்பு போட்டு குளித்து விட்டு வரவேண்டும் என்று அரசு செலவில் சோப்புவையும் 'ஷாம்பு'வையும் வழங்குகிறார், உ.பி. முதல்வராக இருக்கும் 'காவிச் சாமியார்' ஆதித்யநாத்.

கோவா மாநிலத்தில் பல்வேறு சங்பரிவார் அமைப்புகள் இணைந்து 'இந்து ராஷ்டிர' மாநாடு ஒன்றை நடத்தி முடித்துள்ளன. 2023ஆம் ஆண்டுக்குள் இந்தியா 'இந்து ராஷ்டிரமாகும்' என்று மாநாடு அறிவித்திருக்கிறது. மாட்டுக்கறி சாப்பிடுவோரை அரசுகள் பொதுவிடத்தில் வைத்து தூக்கிலிட வேண்டும் என்று சாத்வி சரஸ்வதி என்பவர் அந்த மாநாட்டில் வெளிப்படையாக பேசியிருக்கிறார்.

அயோத்தியில் 'இராமன்' கோயிலைக் கட்டுவதற்கு செங்கல்லை இறக்கி வருகிறார்கள். நாடு முழுதும் 'இராம ராஜ்யம்' என்ற பார்ப்பன ராஜ்யத்தை அமைப்பதே இவர்கள் திட்டம்.

இந்த மதவெறி சூழலில் தமிழ் நாட்டின் தனித்துவத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும். தமிழ்நாட்டில் காலூன்ற துடிக்கும் காவி வன்முறை சக்திகளின் சூழ்ச்சி வலைகளில் சிக்கிடாமல் மக்களை சிந்திக்கச் செய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு உண்மைத் தமிழருக்கும் உணர்வாளர்களுக்கும் இருக்கிறது என்பதை கவலையுடன் சுட்டிக் காட்டுகிறோம்.

## இந்தி பேசும் மாநிலங்களைவிட அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது தமிழ்நாடு

வெங்கைய நாயுடு இந்தி படிக்காத தமிழ்நாட்டை இந்தி படிக்கும் மாநிலங்களோடு ஒப்பிட்டு பார்க்கச் சொன்னார் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

ஹிந்தியும் அவசியமில்லை, வெங்கைய நாயுடுவும் இந்தியாவிற்கு அவசியமில்லை என்றே தோன்றியது.

அரசாங்க புள்ளிவிவரங்களை சிறிது விரிவாக பார்ப்போம்.

**உயர் கல்வி**

பள்ளி கல்வியை முடித்து, உயர் கல்வி (கல்லூரி) சேர்பவர்கள், இந்தியாவிலேயே தமிழ் நாட்டில் தான் அதிகம். அகில இந்திய சராசரியைவிட இருமடங்கு அதிகம். தமிழ் நாடு - 38.2%. பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 17.6%; மபி - 17.4%; உபி - 16.8%; ராஜஸ்தான் -18.0%; இந்திய சராசரி : 20.4%.

**கல்வி நிலையங்களின் தரம்**

2017 ஆண்டுக்கான இந்தியாவின் சிறந்த நூறு கல்வி நிறுவனங்களின் ரேங்க் பட்டியலை மத்திய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை (HRD) வெளியிட்டுள்ளது. அந்த பட்டியலின் படி,

முதல் 100 சிறந்த கல்லூரிகளில் 37 கல்லூரிகள் இருப்பது தமிழ் நாட்டில்.. பிஜேபி பல ஆண்டுகளாக ஆளும் மோடியின் மாடல் மாநிலம் குஜராத்தில் இருபத்தோ வெறும் மூன்றுதான். இதேபோல ஹிந்தி பெல்ட் மாநிலங்களான மபி, உபி, பிகார், ராஜஸ்தான் போன்றவற்றிலிருந்து ஒன்றுகூட இந்த பட்டியலில் இடம் பிடிக்கவில்லை.

முதல்100 சிறந்த பொறியியல் கல்லூரிகளில், தமிழ் நாடு - 22 ; குஜராத் - 5 ; மபி - 3 ; உபி - 6 ; பீகார் -1 ; ராஜஸ்தான் - 3.

முதல் 100 சிறந்த பல்கலைகழகங்களில் தமிழ் நாடு - 24 ; குஜராத் - 2 ; மபி - 0 ; உபி - 7 ; பிகார் - 0 ; ராஜஸ்தான் - 4

**பொருளாதார மொத்த உற்பத்தி (GDP)**

இந்தியாவில் இருக்கும் 29 மாநிலங்களில், 20 மாநிலங்களின் ஒட்டுமொத்த ஜிடிபியை தமிழ்நாடு, கர்நாடகா, மகாராஷ்டிரா ஆகிய 3 மாநிலங்கள் அளிக்கிறது. மகாராஷ்டிரா மாநிலத்தை அடுத்து இப்பட்டியலில் இரண்டாம் இடத்தில் இருப்பது தமிழ்நாடு.

தமிழ் நாடு - 18.80 lakh crore (2nd Place); பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் -10.94 lakh crore (5th) ; மபி - 7.35 lakh crore (10th) ; உபி - 12.37 lakh crore (4th) ; ராஜஸ்தான் - 7.67 lakh crore (7th) ; சத்தீஸ்கர் - 2.77 lakh crore (17th)

**சாப்ட்வேர் ஏற்றுமதி (ஆயிரம் கோடியில்)**

தமிழ் நாடு - 75,000 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 1917 ; மபி - 343 ; உபி - 13,740 ; ராஜஸ்தான் - 712; சத்தீஸ்கர் -18

**சிசு மரண விகிதம் 1000 பிறப்புக்கு**

தமிழ் நாடு - 21 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 36 ; மபி - 54 ; உபி - 50 ; ராஜஸ்தான் -47 ; சத்தீஸ்கர் - 46 ; இந்திய சராசரி: 40

**ஒரு லட்சம் பிரசவத்தில் தாய் இறக்கும் விகிதம்**

தமிழ் நாடு - 79 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் -112 ; மபி - 221 ; உபி - 285; ராஜஸ்தான் - 244 ; சத்தீஸ்கர் - 221 ; இந்திய சராசரி :167

**தடுப்பூசி அளிக்கப்படும் குழந்தைகள் சதவீதம்**

தமிழ் நாடு - 86.7% ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 55.2% ; மபி - 48.9% ; உபி - 29.9%; ராஜஸ்தான் - 31.9% ; சத்தீஸ்கர் - 54%; இந்திய சராசரி : 51.2%

**கல்வி விகிதாசாரம்**

தமிழ் நாடு - 80.33% ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 79% ; மபி - 70% ; உபி - 69% ; ராஜஸ்தான் - 67% ; சத்தீஸ்கர் - 71% ; இந்திய சராசரி : 74%

ஆண் - பெண் விகிதாசாரம் (ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு) இது குறைவாக இருந்தால், பெண் சிசு கொலை அதிகம் என்று பொருள்):-

தமிழ் நாடு - 943 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 890 ; மபி - 918 ; உபி - 902 ; ராஜஸ்தான் - 888 ; இந்திய சராசரி : 919

**தனி நபர் வருமானம் (Per Capita Income) – ரூபாயில்**

தமிழ் நாடு - 1,28,366 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் -1,06,831; மபி - 59,770 ; உபி - 40,373 ; ராஜஸ்தான் - 65,974 ; சத்தீஸ்கர் - 64,442; இந்திய சராசரி : 93,293

**வீடுகளுக்கு மின்சாரம் (households having electricity)**

தமிழ் நாடு - 98.3% ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 96% ; மபி - 89.9% ; உபி - 70.9% ; ராஜஸ்தான் - 91% ; சத்தீஸ்கர் - 95.6%

**மனித வள குறியீடு (Human Development Index)**

தமிழ் நாடு - 0.6663 ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 0.6164 ; மபி - 0.5567 ; உபி - 0.5415 ; ராஜஸ்தான் - 0.5768 ; சத்தீஸ்கர் - 0.358 ; இந்திய சராசரி : 0.6087

**ஏழ்மை சதவீதம் Poverty (% of people below poverty line)**

தமிழ் நாடு - 11.28% ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் -16.63% ; மபி - 31.65%; உபி - 29.43% ; ராஜஸ்தான் -14.71% ; சத்தீஸ்கர் - 39.93%; இந்திய சராசரி : 21.92%

**ஊட்டசத்து குறைபாடு குழந்தைகள் (Malnutrition)**

தமிழ் நாடு - 18% ; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 33.5% ; மபி - 40% ; உபி - 45% ; ராஜஸ்தான் - 32% ; சத்தீஸ்கர் - 35% ; இந்திய சராசரி : 28%

**மருத்துவர்களின் எண்ணிக்கை (ஒரு லட்சம் மக்கள் தொகைக்கு)**

தமிழ் நாடு - 149; பிஜேபி ஆளும் வட மாநிலங்கள் குஜராத் - 87; மபி - 41 ; உபி - 31; ராஜஸ்தான்-48 ; சத்தீஸ்கர்-23 ; இந்திய சராசரி:36

இது மட்டுமல்லாது இந்திய அளவிலும் உலக அளவிலும் அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும், மருத்துவத்திலும், மொழியிலும், கலாசாரத்திலும், பண்பாட்டிலும் இன்றும் தமிழனுக்கு என்று தனி இடம் உண்டு.

இப்படி எந்த ஒரு அளவீடை எடுத்துக் கொண்டாலும், தமிழ்நாடு, மற்ற மாநிலங்களை விட, குறிப்பாக, பிஜேபி ஆளும் மாநிலங்களை விட, எல்லாவிதங்களிலும் பல மடங்கு உயர்ந்த நிலையில் உள்ளது.... இந்திய சராசரியைவிட மேலே, முதலிடங்களில் உள்ளது...

இதை எப்படி வெங்கைய நாயுடுக்கு சொல்றது?

**முகநூலிலிருந்து...**

## மாட்டிறைச்சித் தடையைக் கண்டித்து குமரி குலசேகரத்தில் ஆர்ப்பாட்டம்

நடுவண் பி.ஜே.பி.அரசின் மாட்டிறைச்சித் தடையைக் கண்டித்து குமரி மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக குலசேகரம் சந்தை, காமராசர் சிலை அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் 21-06-2017 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது. மோ.விஸ்ணு வரவேற்புரை யாற்றினார். மணிமேகலை (தமிழ்நாடு அறிவியல் மன்றம், மாவட்டத் தலைவர்) முன்னிலை வகித்தார். தமிழ் மதி (திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலாளர்), இளங்கோ, போஸ் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்திப் பேசினர். நீதி அரசர் (பெரியார் தொழிலாளர் கழக மாவட்டத் தலைவர்) தலைமை தாங்கினார். தோழர்கள் இடையிடையே மத்திய, மாநில அரசுகளுக்கெதிரான கண்டன முழக்கங்களை முழங்கினர். ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் சூசையப்பா, சுனில் குமார், ஜாண் மதி, இரமேஸ் பாபு, இராஜேஸ் குமார், மஞ்சு குமார், ஆற்றூர் அருள் ராஜ், சமூக ஆர்வலர்கள், அசோக், சோனி மோன், சிக்கு, ஜோதி குமார், விஸ்ணு, மதியழகன், சாந்தா, மார்க்சிஸ்ட் கட்சியை சார்ந்த ஜெயன், மார்க்சிஸ்ட் யுனிவர்சலை சார்ந்த இராதாகிருட்டிணன் ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் அனீசு நன்றி கூறினார். முன்னதாக பசுவைப் பற்றி சாவர்க்கர், விவேகானந்தர் சொன்ன கருத்துகள் அடங்கியத் துண்டறிக்கைகள் குலசேகரம் பகுதி முழுவதும் வழங்கப்பட்டது.

# இஸ்லாமியப் பேரரசை எதிர்க்காத பார்ப்பனர்கள், கிருத்தவ பிரிட்டிஷாரை ஏன் எதிர்த்தார்கள்?

1200 ஆண்டுகள் ஆண்ட முகலாயப் பேரரசுகள், பெரும்பான்மை மக்களை அடிமைப்படுத்திய இந்து மனுதர்மக் கோட்பாட்டினை எதிர்க்கவே இல்லை. ஆனால், இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷார்கள் இந்து மனு தர்மச் சட்டத்தை படிப்படியாக ஒழித்து கட்டினார்கள்.

அவை என்னவென்று பார்ப்போம்...

பார்ப்பான் மட்டுமே கல்வி கற்க உரிமை உண்டு எனவும், சத்திரியன் மட்டுமே நிலம் மற்றும் அரசராக இருக்க முடியும் எனவும், வைசியன் வியாபார செய்ய உரிமை உண்டு எனவும், சூத்திரன் இவர்களுக்கு அடிமையாக இருந்து வேலை செய்ய வேண்டும் எனவும் இருந்த இந்து மனு தர்ம சட்டத்தை பிரிட்டிஷார்கள் ஏற்றுக்கொள்ளாமல், சட்டம் என்றால் அனைவரும் சமமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 1773ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசு சட்டத்தை எழுதத் தொடங்கியது.

- சத்திரியர்கள் மட்டுமே சொத்து வைத்துக் கொள்ள உரிமை இருந்ததை, 1795ஆம் ஆண்டு அனைவரும் சொத்தை வாங்கி கொள்வதற்கான உரிமை வழங்கப்பட்டது.
- 1804இல் பெண் சிசு கொலை தடுப்புக்கான அரசாணை வெளியிடப்பட்டது. 1813 கொத்தடிமைகள் ஒழிப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது
- ‘பிராமண’ப் பெண்னை கெடுத்த சூத்திரன் கொல்லப்பட வேண்டும் (இந்து மனு சட்டம் VII 374, 375), ஒரு ‘பிராமணன்’ காம இச்சை தீர சூத்திரப் பெண்ணோடு உறவு கொள்ளலாம். ஆனால் அதன் விளைவாக குழந்தை பிறந்து உயிரோடு இருந்துவிட்டால் பிணம் போன்றதேயாகும். (இந்து மனு சட்டம் IX 178) “பிராமணன்” தப்பு செய்தால் தண்டணையில்லாமல் இருந்த நிலையில்....
- பிராமணர்கள் குற்றம் புரிந்தவராக இருப்பின், அவர்களும் தண்டனை பெறுவதற்கான அரசாணை 1817 ஆம் ஆண்டு பிரிட்டிஷாரால் கொண்டு வரப்பட்டது.
- ‘சூத்திர’ பெண் திருமணம் முடிந்த அன்றே, ‘பிராமண’ருக்கு பணிகள் பல செய்ய 7 நாள்கள் கோவிலில் இருக்க வேண்டும். அதை பிரிட்டிஷாரின் அரசாணையின் மூலம் 1819ஆம் ஆண்டு முடிவிற்கு வந்தது.
- ‘பார்ப்பான்’ மட்டுமே கல்வி கற்க முடியும் என்ற நிலையில் இருந்த இந்து சட்டத்தை 1835 ஆண்டு லாட் மெக்காலேயின் சீரிய முயற்சியின் விளைவாக, ‘சூத்திர’னும் கல்வி கற்கலாம் என்ற அரசாணை வெளியிடப்பட்டது.
- சூத்திரனுக்கு முதலில் பிறக்கின்ற ஆண் குழந்தையை கங்கா நதியில் தள்ளிவிட்டு கொல்ல வேண்டும் என்ற கங்கா தானத்தை 1835-ல் பிரிட்டிஷாரின் அரசாணையின் மூலம் முடிவிற்கு வந்தது.
- 1835 ஆண்டு சூத்திரர்கள் நாற்காலியில் உட்காருவதற்கான அரசாணை கொண்டு வரப்பட்டது.
- 1868 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் இந்து மனு தர்மச் சட்டத்தை தடை செய்ய உத்தரவு பிறப்பித்தது.

இந்தியாவை மட்டும் பிரிட்டிஷார்கள் ஆளவில்லை என்றால், சூத்திரர்களுக்கு கல்வி இல்லை; கல்வி இல்லை என்றால் அம்பேத்கார் இல்லை; அம்பேத்கார் இல்லை என்றால் நாம் இல்லை.

சூத்திரனின் அடிமைச் சங்கிலியை உடைத்த பிரிட்டிஷாரின் நற்பணிகளை நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

**முக நூலிலிருந்து...**

# பெரியாரியம் - பெண்ணுரிமை விவாதங்களுடன் ‘பெண் மானுடம்’ நூல் வெளியீட்டு விழா

பெரியார் சிந்தனைகள் - பெண்ணுரிமை குறித்த விவாதங்களின் நிகழ்வாக பேராசிரியர் சரசுவதி எழுதிய ‘பெண் மானுடம்’ நூல் வெளியீட்டு நிகழ்வு ஜூலை 9ஆம் தேதி மாலை சென்னை ‘கவிக்கோ’ அரங்கில் சிறப்புடன் நிகழ்ந்தது. பல்வேறு இதழ்களில் பேராசிரியர் சரசுவதி எழுதிய 32 கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்திருக்கும் இந்த நூலை, பரிசல் புத்தக நிலையம் வெளியிட்டிருக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் வலிகளையும் உணர்வுகளையும் இலக்கியங்களாக்கிய எழுத்தாளர் பா. செயப்பிரகாசம் தலைமையில் நடந்த நிகழ்வில் மணிமேகலை சவுரிராசன் வரவேற்புரையாற்ற, கவிஞர் காளமேகம், ஓ. சுந்தரம், கீதா இராமகிருட்டிணன், கவிஞர் ஜெய பாஸ்கரன், ஆழி. செந்தில்நாதன், முனைவர் சுந்தரவல்லி ஆகியோர் நூல் குறித்தும் பெண்ணுரிமை குறித்தும் ஆழமான கருத்துகளை முன் வைத்தனர். நிறுவனங்களின் வழியாகவும் குடும்ப அமைப்பின் வழியாகவும் மறுக்கப்படும் பெண்ணுரிமை குறித்தும் சமூகத்திலும் குடும்பத்திலும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டன.

நூலை தந்தை பெரியாருக்கு அர்ப்பணித்துள்ள இந்த நூலின் ஆசிரியர் பேராசிரியர் சரசுவதி முன்னுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“இராமாயண ‘புஷ்பக விமானம்’, ரைட் சகோதரர் களின் கண்டுபிடிப்புக்கு மிக மூத்தது. அவர்களுக்கே உந்து சக்தியாக இருந்தது என்று மார்தட்டும் இவர்கள், சந்தேகத்தின்பேரில் சீதையை இராமன் தீக்குளிக்கச் செய்ததுதான், இன்றைய பெண் எரிப்புக் கொலைகளுக்கு முன்னோடி, வழிகாட்டி என்பதை மூர்க்கமாக



மறுப்பார்கள், மழுப்புவார்கள். மதிமயங்கி மாதவி வீடேகி வாழ்ந்து, பொருளிழந்து பிணங்கித் திரும்பிய கோவலன், புது வாழ்வு தொடங்க ‘சிலம்புள கொண்மின்’ என்று இன் முகத்தோடு ஈந்த கண்ணகிகள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். உரைசால் பத்தினிகளை உயர்ந்தோர் ஏத்த, கற்பரசிகள் பெய்யெனப் பெய்யும் பெருமழையாகப் போற்றப்படுகிறார்கள். சரி! ஆனால், இவர்களோடு கற்பே அற்ற, கற்பிழந்த கோவலன்கள், கேவலன்களாக எந்தவிதக் கூச்ச நாச்சமுமின்றி மதுரை மூதூர்களிலும், மதராசப் பட்டணங்களிலும் தலை நிமிர்ந்து நெஞ்சுயர்த்தித் திரிந்து கொண்டிருக்கிறார்களே அவர்கள் தூற்றப்படுகிறார்களா என்ன? ஏனிந்த இரட்டை அளவுகோல்?” என்று கேட்கிறார்.

நூலுக்கு அணிந்துரை எழுதிய எழுத்தாளர் பா.ஜீவசுந்தரி, தனது அணிந்துரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மனித விலங்குகள் கூட்டமாக குழுவாக வாழும் தன்மை கொண்டவை. அதனால் தாய்வழிச் சமுதாயத்தில் குடிகளாக வாழ்ந்தது. பின்னர் தந்தை வழிச் சமுதாயத்தில் அதுவே படிப்படியாகக் குடும்பம் என்ற அமைப்பாக இறுக்கப்பட்டது. குடும்பம் என்ற அமைப்பை அப்படியே கட்டிக் காப்பதன் மூலம்தான்



சொத்துடைமை உரிமையை வம்சாவழியாகக் கை மாற்ற முடியும் என்பதால் ஆணாதிக்க சக்திகள் மதத்தையும் அரசையும் அதற்காக உருவாக்கிப் பயன்படுத்தின. இன்று வரை உலகில் பல அமைப்புகள், நிறுவனங்கள் தூள் தூளாக நொறுக்கப்பட்டு விட்டன. ஆனால் குடும்பம் என்ற அமைப்பு மட்டும் அப்படியே பாதுகாக்கப்படுகிறது. இதனை முதன்முதலில் பெண்ணிய நோக்கில் உணர்ந்தவர் பிரெட்ரிக் ஏங்கல்ஸ் என்பார்கள்.

அதற்கு அடுத்து இதனைச் சரியாகக் கணித்துக் கூறியவர் தந்தை பெரியார். பெண் விடுதலையில் சாதி ஒழிப்பின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டினர். சுயமரியாதைத் திருமணங்களை முன்னெடுத்து நடத்திக் காட்டினார். ஆயிரக் கணக்கில் அவர் நடத்திய சுயமரியாதைத் திருமணங்கள் இந்து மதத்தின் அகமண முறையை வெடி வைத்துத் தகர்த்தன.

அது மட்டுமல்லாமல் வீட்டுக்குள் குடும்பத்துக்குள் பெண்களுக்கு எதிராக நடைபெறும் வன்கொடுமைகளுக்கு எதிராகவும் பெண்களைப் போராடத் தூண்டினார். “புருஷன் இரண்டாம் கலியாணம் செய்து கொண்டால் நீயும் இரண்டாம் தாரமாக, மூன்றாம் தாரமாகக் கலியாணம் செய்து கொள்’ என்றார். அவன் சின்ன வீடு வைத்துக் கொண்டால் நீயும் வைத்துக் கொள். புருசன் அடித்தால் அடிபட்டுக் கொண்டிராதே” என்றார். இது பழைய மன்னராட்சி அல்ல. ஜனநாயக ஆட்சியில் பெண்ணுக்கு அனைத்து உரிமையும் இருக்கிறது என்றார். அந்தக் காலகட்டத்தில் சமூகத்துக்கு இது அதிர்ச்சி வைத்தியம்தான். ஆனால் இன்று இவையெல்லாம் பெண்ணுரிமை சாசனத்தில் இடம் பெறத் தொடங்கியிருக்கிறது” என்று குறிப்பிடுகிறார்.

விழாவில் நூல் வெளியீட்டுக்கு உதவியோருக்கு சிறப்புகள் செய்யப்பட்டன. நூலின் ஆசிரியர் பேராசிரியர் சரசுவதி சுருக்கமான ஏற்புரை வழங்கினார். ‘தோழமை’ அமைப்பின் இயக்குனர் தேவநேயன் நிகழ்ச்சிகளை சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். பல்துறை சார்ந்த சிந்தனையாளர்கள், இலக்கிய வாதிகள், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், பெண்கள் என அரங்கம் நிரம்பியிருந்தது.

**- நமது செய்தியாளர்**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘மஞ்சள்’ - யாருக்கு புனிதம்? யாருக்கு இழிவு?

பொது வெளியில் மிக முக்கியமான, சொல்லப்போனால் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் முதன்மையான ஒரு அரசியலைப் பேசுகிற படைப்பாக வந்திருக்கிறது ‘கட்டியக்காரி’ குழுவின் ‘மஞ்சள்’ நாடகம். மஞ்சள் மகிமை பற்றிய மயக்கங்கள் உள்ள சமுதாயத்தில், அது குறித்த உறுத்தல் உணர்வைக் கிளறிவிடுவதாக, வேறொரு மஞ்சள் வண்ணம் பற்றிய எண்ணத்தைப் பதிக்கிறது.

அது, நம் ஒவ்வொருவர் உடலில் உற்பத்தியாகி, வெளியேற்றிய பின் அருவருக்கச் செய்கிற மலத்தின் வண்ணம். மலம் என்று எழுதி வாசிப்பதற்கே முகங்கள் சுழியக்கூடும், ஊராரின் மலத்தைத் தங்கள் கைகளால் அள்ளி அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிற, அரசாங்கம் அதெல்லாம் இல்லை என மறுத்துக்கொண்டிருக்கிற, ஒரு பகுதி மக்களின் வாழ்க்கையை பொதுச் சமூகம் யோசித்திருக்குமா ? ஊரைத் தூய்மையாக வைத்துக் கொண்டிருக்கிற அவர்கள் ஊருக்கு வெளியே ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிற நெடுங்காலத் துரோகத்தைச் சாடுகிறது நாடகம்.‘‘உங்களுக்கெல்லாம் மஞ்சள் புனிதமானது. எங்களுக்கு அது அருவருப்பானது,’’ என்பது முதல், நாடகத்தின் பல உரையாடல்களைக் கேட்கிறபோது, நடிகர்களின் உடல்மொழியைப் பார்க்கிறபோது கண்ணீர் முட்டுவதைத் தடுக்கவே முடியாது. அப்படி அழுவதோடு அவையோர் இருந்தால் அது நாடகத்தின் தோல்வி. தங்களுக்கும் இதில் பங்கிருக்கிறது என்ற குற்ற உணர்ச்சியோடும், இனி இதைத் தொடர விடக்கூடாது என்ற சினத்தோடும் எழுகிறார்கள், அது படைப்பின் வெற்றி.குறிப்பிட்ட கதாபாத்திரங்களைச் சுற்றி வருகிற கதையோட்டமாக இல்லாமல், மலத் தொட்டியில் இறங்கக் கட்டாயப் படுத்தப்பட்டவர்கள் உயிரைவிட்டது உள்ளிட்ட பல கதைகள் வருகின்றன. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு செய்தியைப் பின்னணியாகக் கொண்டிருக்கிறது. திரை உயர்த்தப்படுவதற்கு முன்பாக, ‘‘இந்த நாடகத்தில் இடம் பெறும் நிகழ்வுகள், கருத்துகள், பேச்சுகள் அனைத்தும் கற்பனை அல்ல, முற்றிலும் உண்மை,’’ என்று அறிவிக்கப்படுவதை எல்லாக் காட்சிகளும் மெய்ப்பிக்கின்றன.அவர்கள் கழிவுத்தொட்டியில் இறங்குவது, மதுவுக்குக் காசு வேண்டும் என்பதற்காகத்தான் என்று அவர்களின் சாவைக்கூட அவர்களுடைய குற்றமாகவே வாதாடுவதில் இருப்பது, ‘‘இவர்கள் இப்படியே இருந்து சாகப் பிறந்தவர்கள்தான்’’ என்ற அலட்சியமேயன்றி வேறென்ன ? அந்த அலட்சியத்தின் மூல வேர் இருக்கும் இடத்தைக் காட்டுவதே இந்த நாடகத்தின் தனித்துவம்.

வெறும் தொழிலாக மட்டுமே இதைப் பார்த்து, பாதுகாப்புக் கருவிகளைத் தவறாமல் பயன்படுத்தச் சொல்கிற அறிவுரைகள் எங்கும் பொழியப்படுகின்றன. நாடகமோ, இது ஒரு தொழில்தான் என்றால் ஏன் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கடமையாக்கப்பட்டிருக்கிறது எனக் கேட்டு, இந்திய சமுதாயக் கோபுரத்தின் மிக மிக அசிங்கமான அடிவாரமாகிய சாதியத்தைச் சுட்டிக்காட்டுகிறது.இதைத் தானாக முன்வந்து வழக்காக எடுத்துக்கொண்டு மாற்றியிருக்க வேண்டிய நீதிமன்றம் என்ன செய்கிறது ? கார்ப்பரேட்டுகள் சம்பந்தப்பட்ட வழக்குகளானால், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க ஆணையிடுகிறது. இவர்களின் பிரச்சனைகள் என்றால் சாவகாசமாகத் தள்ளிவைக்கிறது. சாதிமன்றத்தை நீதிமன்றத்தால் மீற முடியாததை இதை விட எளிமையாகச் சொல்ல முடியாது.

நடப்பு நிலவரங்களைச் சொல்வதோடு நிற்காமல், காந்தி - அம்பேத்கர் இடையே நடந்த விவாதங்களை விரிவாகப் படித்தறியத் தூண்டுகிற காட்சிகள் இருக்கின்றன. அதேவேளையில், சாதி ஒழிப்பைப் பற்றிப் பேசாமல் தீண்டாமை ஒழிப்பை முன்வைப்பதை இந்நாடகம் விமர்சிக்கிறது. ஒரு சாதி தன்னைஉயர்ந்த பிரிவாகக் கருதிக்கொண்டு, அடுத்த சாதியைக் கீழ்நிலையில் வைத்துப் பார்ப்பதன் அடிப்படையே, உன்னை விட நான் பெரிய ஆள், என்னை நெருங்காதே என்ற மமதைதான். அந்த மமதைதான் தீண்டாமை. மக்கள் ஏற்கும் வகையில் அந்தத் தீண்டாமையை ஒழிக்க அணி திரட்டுவது என்பது அடிப்படையில் சாதியை ஒழிக்கிற அறைகூவல்தான். கழிப்பறைகளுக்குள் ஒரு பகுதி மக்களை அடைத்துவைத்த கொடுமை மிகக்கொடூரமானதுதான், அதை ஒப்பிட முடியாதுதான். ஆயினும், தீண்டாமையோ பாகுபாடோ இல்லாத சாதி, செல்லாத ரூபாய் நோட்டு போன்றதுதான். ஆகவே தீண்டாமை ஒழிப்புக்காகக் களமிறங்குவது அடிப்படையில் சாதிச் சுவர் உடைப்புக்காகக் கை உயர்த்துவதுதான். இது பற்றிய ஆரோக்கியமான விவாதங்களுக்கு இந்த நாடகமும் வழி செய்வது வரவேற்கத்தக்கதே.

எல்லா மாநில மொழிகளிலும் தோட்டியை எப்படி அழைக்கிறார்கள் எனக் காட்டுகிற காட்சி, இவர்களை இப்படி கீழ்மைப்படுத்தி வைத்திருக்கிற கொடுமையைப் பொறுத்தவரையில் நாடு முழுக்க ‘ஒற்றைப் பண்பாடு’ ஏற்கெனவே பரவியிருப்பதை உணர்த்துகிறது. அதை மறைக்க சுண்ணாம்புப் பொடி தூவுகிற வேலையாகக் கொண்டுவரப்படுகிற ‘ஸ்வச் பாரத்’ போன்ற தந்திரங்கள் முறியடிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையை நாடகம் பகிர்கிறது.ஆட்சிக்கு யார் வந்தாலும் தங்களை அவர்களுடைய தேவைகளுக்கு சேவை செய்கிறவர்களாக மாற்றிக்கொள்ளும் அதிகார வர்க்கத்தை விமர்சிக்கிற நயமான சித்தரிப்பு ஒன்று வருகிறது. ஆனால், அதிகார வர்க்கம் அப்படித்தானே இருக்க வேண்டும் ? மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்சியின் கொள்கைகளை நிறைவேற்றுகிறவர்களாகத்தான் அதிகாரிகள் இருக்க வேண்டுமேயன்றி, சுயேச்சையான ஆட்சியை நடத்துகிறவர்களாக இருக்கக் கூடாதல்லவா ?கட்டியக்காரி தயாரிப்பு என்றால், நாடக ஆக்கம் பற்றிப் பேசுவதற்கே நிறையக் கிடைக்கும்.

கயிற்றில் தொங்கும் செயற்கைக் கால்கள், கைகள், குறிப்பிட்ட காட்சியின் பேசு




பொருளுக்கேற்ற வண்ண விளக்குகள் உள்ளிட்ட வெளிப்பாடுகள் அப்படிப்பட்டவை தான். இவர்களின் முந்தைய நாடகங்களில் பார்த்த நுட்பங்கள் அப்படியே தொடர்வது போன்ற எண்ணமும் ஏற்படுகிறது.

பத்திரிகையாளர் பாஷா சிங் ஆங்கிலத்தில் ‘அன்ஸீன்’ என ஆவணப்படுத்தி, தமிழில் ‘தவிர்க்கப்பட்டவர்கள்’ என வந்துள்ள புத்தகத்தை மையமாகக் கொண்டு, பத்திரிகையாளர் ஜெயராணி உரையாடல்களை எழுதிய இந்த நாடகத்தைத் தன் கற்பனையாலும் ஒருங்கிணைப்பாலும் பார்வையாளர்களின் அனுபவமாக்கியிருப்பவர் இயக்குநர் ஸ்ரீஜித் சுந்தரம். திரைப்பட இயக்குநர் பா,இரஞ்சித்தின் நீலம் தயாரிப்பகமும், ஜெய் பீம் மன்றமும் இணைந்து வழங்கிய இந்த நாடகம் உரிய மாற்றங்களோடு, மையக் கருத்தோடு உடன்படுகிற அவையினரின் முன்பாக மட்டுமல்லாமல், அனைத்துத் தரப்பு மக்கள் முன்பாகவும் கொண்டு செல்லப்பட வேண்டும்.

**நன்றி: ‘தீக்கதிர்’ திறனாய்விலிருந்து சில பகுதிகள்**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கி 12ஆம் தேதி வரை பரப்புரைப் பயணம் நடத்த முடிவெடுக்கப்பட்டு அதற்கான பயணத் திட்டங்களும் வடிவமைக்கப்பட்டன.

“இழந்து வரும் உரிமைகளை மீட்போம்; தமிழகத்தின் தனித்தன்மை காப்போம்” என்ற முழக்கத்தை முன் வைத்து, “சமூக நீதி - சமத்துவ பரப்புரைப் பயணம்” என்ற தலைப்பில் பயணம் தொடங்க முடிவு செய்யப்பட்டது.

மேட்டூர், கோவை, மதுரை, சென்னை, மயிலாடுதுறை ஆகிய ஐந்து ஊர்களிலிருந்து பரப்புரைக் குழு ஆகஸ்டு 8ஆம் தேதி புறப்படும், ஆகஸ்டு 12இல் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பயணம் நிறைவடைகிறது. திருச்செங்கோட்டில் நிறைவு விழா நிகழ்வு நடைபெறுகிறது.(பயணத் திட்டங்கள், பொறுப்பாளர்கள் பெயர்கள் தனியே வெளியிடப்பட்டுள்ளது)

அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பரப்புரை செயலாளர் பால் பிரபாகரன், அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி, தலைமைக் கழக செயலாளர் தபசி குமரன், இரா. உமாபதி, அன்பு தனசேகர், கொளத்தூர் குமார், ந. அய்யனார், மயிலாடுதுறை இளையராஜா உள்ளிட்ட தலைமைக் குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

## ஆர்.எஸ்.எஸ். தலைவர் வருகைக்கு எதிர்ப்பு



மக்களைச் சமதர்மம் அடையச் செய்யும் இடஒதுக்கீட்டு முறையை ஒழிக்கத்துடிக்கும் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தின் குமரி மாவட்ட வருகையைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கறுப்புக்கொடி (08-07-2017 சனிக்கிழமை) காட்டச் சென்ற கழகத் தோழர் நீதி அரசர் அவர்களை காவல் துறை கைது செய்து பிணை வழங்காமல் 15 நாள் காவலில் வைத்தது. தற்போது நாகர்கோவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். மக்களை மதத்தால் உசுப்பி சண்டைப் போட வைத்துவிட்டு அதில் குளிர் காயும் பார்ப்பன மத வெறியருக்கு பாதுகாப்பும், மக்களுக்காக போராடும் போராளிகளுக்குச் சிறையும் வழங்கும் காவல் துறைக்கு குமரி மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக கண்டனங்களைத் தெரிவிக்கிறோம். இடஒதுக்கீட்டு முறையால் பயன்பெற்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரே இடஒதுக்கீட்டை ஒழிக்கும் பார்ப்பனனுக்கு ஆதரவாகச் செயல்படுவது வருந்தத்தக்கது என்று குமரி மாவட்டக் கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

## இப்படி ஒரு மூடத்தனம்; ‘சரசுவதி’ பேனாவாம்!

குஜராத் மாநிலம் பஞ்ச மகால் மாவட்டத்தில் கஸ்தாபஞ்சன் என்ற கோயிலின் அனுமன் பக்தராக பாபுஜி என்பவர் ஒரு விளம்பரத்தை வெளியிட்டுள்ளார். “எங்கள் கோயிலில் சரஸ்வதி அனுமான் பூஜையில் வைத்து பூஜை செய்யப்பட்ட மேஜிக் பேனாவைப் பயன்படுத்தி தேர்வு எழுதினால் 8ஆம் வகுப்பு முதல் கல்லூரிப் படிப்பு வரை தோல்வியே இருக்காது” என்கிறது அந்த விளம்பரம். ஒரு பேனாவின் விலை என்ன தெரியுமா? ரூ.1900/- இதையும் நம்பி பேனாவை வாங்க பெற்றோர்கள் கூட்டம் படை எடுத்துக் கொண்டிருக்கிறதாம். ‘சரஸ்வதியை வழிபட்டால் கல்விச் செல்வம் வந்து சேரும்’ என்று புராண காலத்தில் பார்ப்பனர்கள் மூடநம்பிக்கையை பரப்பினார்கள். சரஸ்வதிக்கு பூஜை போட்ட காலத்தில் ‘தற்குறிகள்’ நாடாகவே இருந்தது. இப்போது ‘அனுமன் பூஜை செய்த பேனா’ வந்திருக்கிறது.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 13th July 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN